31.3.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயிகளுக்கு பயிற்சி

பூண்டி வட்டார வேளாண்மை துறை சார்பில் அட்மா திட்டத்தின் மூலம் சித்தம்பாக்கத்தில் உள்ள விவசாயிகளுக்கு பண்ணை பள்ளி பயிற்சி கருவிகள் வழங்கும் விழா சனிக்கிழமை நடைபெற்றது. விழாவில், வேளாண்மை உதவி இயக்குநர் பிரின்ஸ் கிளெமென்ட் தலைமை வகித்தார். அட்மா திட்ட துணை இயக்குநர் முத்துராமன் முன்னிலை வகித்தார். தொழில் நுட்ப மேலாளர் பாஸ்கர் வரவேற்றார். இதில், பச்சை பயறு சாகுபடி பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்தும், மகசூலை அதிகரிக்க 2 சதவீதம் டி.ஏ.பி கரைசல் தயாரித்தல், உபயோகித்தல் குறித்தும் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு இலவசமாக இடுபொருட்கள், பச்சை பயறு சாகுபடி குறித்த தொழில்நுட்ப கையேடுகள் வழங்கப்பட்டன. உதவி தொழில்நுட்ப மேலாளர் லோகேஷ்வரன் நன்றி கூறினார். பண்ருட்டியில் விற்பனைக்கு வந்த திருச்செந்தூர் பனை வெல்லம் திருச் செந்தூரில் இருந்து கொண்டுவரப்பட்ட பனை வெல்லம், பனங்கற்கண்டு சரக்கு வாகனத்தில் வைத்து பண்ருட்டியில் பல பகுதிகளில் விற்பனை செய்யப்படுகிறது. பனை மரத்தில் இருந்து கிடைக்கும் பதநீரை காய்ச்சி அதிலிருந்து பனை வெல்லம், பனங்கற்கண்டு தயாரிக்கப்படுகிறது. இவற்றை கருப்பட்டி எனவும் அழைப்பர். இவை சுவை, மணத்துடன் மருத்துவ குணம் கொண்டுள்ளதால், இன்றளவும் இதன் பயன்பாடு குறையவில்லை. திருச்செந்தூரில் இருந்து வந்துள்ள சிலர் தனித்தனியாக பிரிந்து சென்று பண்ருட்டியின் பல பகுதிகளில் கருப்பட்டி, பனங்

கற்கண்டு, அச்சு வெல்லம் விற்பனை செய்து வருகின்றனர். மினி சரக்கு வாகனத்தில் இவைகளை வைத்து முக்கிய வீதிகள் மற்றும் மக்கள் கூடும் இடத்தில் வைத்து விற்பனை செய்து வருகின்றனர். இதுகுறித்து பனை வெல்லம் விற்பனை செய்யும் துரை கூறியதாவது: பனங்கற்கண்டு முதல் தரம் ரூ.400-க்கும், இரண்டாம் தரம் ரூ.300-க்கும், கிராம்பு கலந்த சுக்கு வெல்லம் கிலோ ரூ.200-க்கும், கருப்பட்டி முதல் தரம் ரூ.120-க்கும் விற்பனை செய்து வருகிறோம். நாள் ஒன்றுக்கு சுமார் 50 கிலோ விற்பனை செய்தால், செலவு போக ரூ.400 முதல் ரூ.500 வரை கிடைக்கும் என கூறினார்.

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாய கருத்தரங்கில் தகவல் சந்தைப்படுத்தும் முறையில் விளை பொருளுக்கு லாபம்

திருச்சி: "சந்தைபடுத்துதல் முறையில், விவசாய விளை பொருட்களுக்கு அதிக லாபம் கிடைக்கும்," என, திருச்சி நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் சுரேஷ் தெரிவித்தார். உழவர் உற்பத்தியாளர் நிறுவனங் களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம், திருச்சியில் நடந்தது. கருத்தரங்கில், நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் சுரேஷ் பேசியதாவது: நபார்டு வங்கிக்கு, நடப்பாண்டு மத்திய அரசு, 200 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதன் மூலம், 2,000 உற்பத்தி நிறுவனங்களை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. 10 லட்ச ரூபாய் வரை கடன் பெறலாம். திருச்சி மாவட்டத்தில், பால் உற்பத்திக்காக துறையூர் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில், 350 உறுப்பினர்கள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர். 110 விவசாய பொருட்களை சந்தைபடுத்த, நிறுவனங் களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. வளர்ந்த நாடுகளில்

விவசாயிகளிடம், அதிகமான அளவில் நிலம் உள்ளது. ஆனால், இந்தியா போன்ற வளரும் நாடுகளில், சிறு அளவிலான விவசாய நிலங்களை ஒருங்கிணைக்க வேண்டும். அதிக லாபம் பெற விவசாய விளைபொருட் களை சந்தைப்படுத்த வேண்டும், என்றார். உழவர் உற்பத்தியாளர் நிறுவனர் கரிகாலன் பேசியதாவது: சில ஆண்டுகளுக்கு முன், 25 லட்ச ரூபாய் முதலீட்டில் உற்பத்தியாளர் நிறுவனம் அமைக்கப்பட்டது. இதில், 150 உறுப்பினர்கள் உள்ளனர். முதலாம் ஆண்டில், 41 லட்ச ரூபாய் மதிப்பில் வர்த்தகம் நடந்தது. இதில், ஒரு லட்ச ரூபாய் வருமானம் கிடைத்தது. இரண்டாம் ஆண்டில், ஒரு கோடியே, 33 லட்ச ரூபாய் வர்த்தகத்தில், மூன்று லட்ச ரூபாய் வருமானம் வந்தது. வருமான வரியாக மட்டும், 56 ஆயிரம் ரூபாய் கட்டியுள்ளோம். நடப்பாண்டு வரி முன்னதாக, 50 ஆயிரம் ரூபாய் கட்டியுள்ளோம். நடப்பாண்டு ஒரு கோடியே, 40 லட்ச ரூபாய் வரை வர்த்தகம் இருக்கும், என எதிர்பார்க்கிறோம்.மேலும், தமிழக அரசு வழங்கிய, 15 லட்ச ரூபாய், விவசாய இடுபொருட்களை வாங்கி, குறைந்த விலையில் வாடகைக்கு விடுகிறோம். விவசாய பணிகளுக்காக, ஆட்களை தேர்வு செய்து, அனுப்பி வைக்கிறோம்.

## தக்காளி வியாபாரிகளின் "ஜாக்பாட்' எதிர்பார்ப்பு

வடமதுரை : வரத்து அதிகரிப்பால் தக்காளி கொள்முதல் விலை உயராமல் இருப்பதால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தில் வடமதுரை, அய்யலூர், கோபால்பட்டி, ஒட்டன்சத்திரம் உள்பட அனைத்து பகுதியிலும் தக்காளி விவசாயம் நடக்கிறது. முதலீடு, பராமரிப்பு செலவு குறைவு, நல்ல லாபம் தரக்கூடிய பயிர் என்பதால் விவசாயிகள் ஆர்வத்துடன் தக்காளி பயிரிடுகின்றனர். இனால் மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரித்து விலை கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வரத்து குறையும் கால கட்டத்தில் சில நாட்களாவது அதிகபட்ச விலை கிடைத்து திடீரென "ஜாக்பாட்' டாக அதிக லாபம்

கிடைக்கும். நடப்பு பருவத்தில் 17 கிலோ கொண்ட பெட்டிக்கு அய்யலூர் மார்க்கெட்டில் ரூ. 80 முதல் 100 வரை விலை கிடைக்கிறது. சில்லரை விற்பனையில் கிலோ ரூ.10 க்கு விற்கப்படுகிறது. சில நாட்களுக்கு முன் தெலுங்கு வருட பிறப்பையொட்டி ஆந்திராவில் விடுமுறை இருந்தநாளில் மட்டும் ரூ. 150 வரை விலை கிடைத்தது. மற்ற அனைத்து நாட்களிலும் ரூ.100 அளவிலேயே தொடர்வதால் விவசாயிகள் ஏமாற்றமான மனநிலையில் உள்ளனர். திடீரென விலை உயருமா என எதிர் பார்ப்போடு உள்ளனர். அய்யலூர் கமிஷன் மண்டியினர் கூறுகை யில்,"தற்போது ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் உள்ளூர் தக்காளி வரத்து உள்ளதால் அங்கிருந்து வியாபாரிகள் வருவதில்லை. பட்டுக் கோட்டை, திருப்பத்தூர் மற்றும் இங்குள்ள வியாபாரிகள் மட்டுமே வருவதால் விலையில் பெரிய அளவில் முன்னேற்றம் இல்லை" என்றனர்.

## <u>தேனி வாழை விவசாயிக்கு "வாழ்நாள் சாதனையாளர்' விருது</u>

கம்பம் : வாழை சாகுபடியில் சர்வதேச அளவில் சாதனை மகசூல் எடுத்துள்ள தேனி வாழை விவசாயிக்கு "வாழ்நாள் சாதனையாளர்' விருதினை மகாராஷ்டிரா நீர்வளத் துறை அமைச்சர் கிரிஷ் வழங்கினார்.

தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டியை சேர்ந்தவர் குருநாதன். இவர் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக வாழைச் சாகுபடி செய்து வருகிறார். சுமார் 150 ஏக்கர் பரப்பில் வாழை மற்றும் திராட்சை சாகுபடி செய்து வருகிறார்.ஏற்கெனவே அகில இந்திய அளவில் வாழையில் அதிக மகசூல் எடுத்ததற்காக பல முறை விருதுகளை வாங்கியுள்ளா◌ார். தற்போது சர்வதேச அளவில் வாழைச் சாகுபடியில் சாதனை மகசூல் எடுத்ததற்காக "வாழ்நாள் சாதனையாளர்' என்ற விருது மற்றும் ரூ. 51 ஆயிரம் பரிசுத் தொகையை மகாராஷ்டிரா மாநிலத்தில் நடைபெற்ற விழாவில் மகாராஷ்டிரா நீர்வளத்துறை அமைச்சர் கிரிஷ் மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் நாத்ராகோட்சா ஆகியோர் வழங்கினார். குருநாதன் கூறுகையில், "வாழை சாகுபடியில் நவீன தொழில் நுட்பங்களை

பின்பற்றி வருகிறேன். முறையான நீர் நிர்வாகம், உர மேலாண்மை, நோய் தாக்குதலில் இருந்து காக்க பூச்சி மருந்து மேலாண்மை உள்ளிட்ட அனைத்து விஷயங்களிலும் தீவிர கவனம் செலுத்தி, மகசூல் எடுத்து வருகிறேன். தற்போது எக்டருக்கு 165 டன் எடுத்துள்ளேன்' என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மிளகாய் சாகுபடியில் அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு ஆலோசனை

காஞ்சிபுரம், : மிளகாய் சாகுபடியில் அதிகளவில் மகசூல்பெற விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் பெருமாள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:காஞ்சிபுரம் மாவட்டத்தில் தற்போது சித்திரை பட்டத்தில் காய்கறி சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதிக விலை கொடுத்து வாங்கும் விதைகள் தரமானதாக உள்ளதா? நல்ல முளைப்புத்திறன் உள்ளதா? என விவசாயிகள் பார்க்கவேண்டும். குறிப்பாக, மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகள் 100 சதவீதம் முளைப்பு திறன் உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். வீரிய ஒட்டுரக மிளகாய் பயிரினை 2.5 அடி இடைவெளிவிட்டு நடவு செய்தால் ஏக்கருக்கு 8,890 செடிகள் வரை பராமரிக்கலாம். இப்படி செய்தால் 20 சதவீதம் கூடுதல் மகசூல் பெறலாம்.மேலும் விவசாயிகள் தங்களது விதைகளை 10 கிராம் மாதிரி எடுத்து விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்ற முகவரியில் ரூ30 செலுத்தி பரிசோதனை செய்து அதிக மகசூல் பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என கூறப்பட்டுள்ளது.

## ஆற்காடு அருகே நவரை பருவ நெல் அறுவடை பரிசோதனை

ஆற்காடு, : ஆற்காடு அருகே நவரை பருவ நெல் பயிர் அறுவடை பரிசோதனை நேற்று நடந்தது. ஆற்காடு தாலுகா பெருங்கால்மேடு கிராமத்தில் வேளாண்மைத்துறை மற்றும் புள்ளியல் துறை சார்பில் பயிர் மதிப்பீட்டாய்வு திட்டத்தின் கீழ் விவசாயி அரிமூர்த்தியின் வயலில் பயிர் செய்யப்பட்டு இருந்த ஏடிடிஆர் 45 ரக நெல் அறுவடை பரிசோதனை செய்யப்பட்டது. தேசிய மாதிரி ஆய்வு அலுவலக முதுநிலை புள்ளியியல் அலுவலர் ராகவன் முன்னிலையில் ஐந்து மீட்டர் நீளம், ஐந்து மீட்டர் அகலம் கொண்ட 25 சதுர மீட்டர் பரப்பளவில் அறுவடை செய்யப் பட்டது. இதில் 22.550 கிலோ நெல் பெறப்பட்டது. இதன் மூலம் ஒரு ஏக்கருக்கு 9020 கிலோ நெல் கிடைத்ததாக பரிசோதனையில் தெரியவந்தது. அப்போது ஆற்காடு வேளாண் உதவி இயக்குநர் சு.பேபிபர்வதம், வேளாண்மை அலுவலர் டேவிட் ராஜ்குமார், துணை வேளாண்மை அலுவலர் எஸ்.செல்வன், உதவி வேளாண்மை அலுவலர்கள் வெங்கடேசன், ஏழுமலை மற்றும் முன்னோடி விவசாயிகள் கணேசன், உதயசங்கர் ஆகியோர் உடன் இருந்தனர்.

## சேலம் மார்க்கெட்டில் களை கட்டியது வெள்ளரி விற்பனை

சேலம், : சேலத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால், வெள்ளரி விற்பனை களை கட்டியுள்ளது. சேலத்தில் கடந்த சில தினங்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. வெயிலில் சிக்கி தவிக்கும் பொதுமக்கள், அவற்றை சமாளிக்க தர்ப்பூசணி, கம்பங்கூழ், மோர், பழச்சாறு மற்றும் குளிர்பான கடைகளை தேடி அலைகின்றனர். இதனால் கோடைக்கு இதமளிக்கும் வெள்ளரி கடைகளிலும் வியாபாரம் களை கட்டியுள்ளது. சேலம் மாவட்டம் ஆட்டையாம்பட்டி மற்றும் நாமக்கல் மாவட்டம் செண்பகமாதேவி, காளிப்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அதிகளவில் வெள்ளரி சாகுபடி செய்யப்படுகிறது. அங்கு

அறுவடை செய்யப்படும் வெள்ளரி சேலம் போஸ் மைதானத்திற்கு கொண்டு வரப்பட்டு, சிறு வியாபாரிகள் மூலம் மாநகரின் பல பகுதிகளில் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது சேலம் மார்க்கெட்டுக்கு தினசரி 1 டன் முதல் 2 டன் வரை வெள்ளரி வரத்து உள்ளது. கிலோ ரூ.50 முதல் 60 வரையும், காய் ஒன்று ரூ.3 முதல் 6 வரையும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.இதுகுறித்து வெள்ளரி வியாபாரி ஒருவர் கூறுகையில், "சேலத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், வெள்ளரி வியாபாரம் களைகட்டியுள்ளது. தற்போது சீசன் முடிந்த போதிலும் அதன் வரத்து அதிகமாக உள்ளது. 800 வெள்ளரி பிஞ்சுகள் அடங்கிய ஒரு மூட்டை ரூ.2,400 முதல் கொள்முதல் செய்யப்படுகிறது. அடுத்து வரும் வாரங்களில் வெள்ளரி வரத்து மேலும் குறைய உள்ளதால், விலையும் அதிகரிக்க வாய்ப்புள்ளது" என்றார்.

## <u>அரூரில் சப்போட்டா கிலோ ரூ20க்கு விற்பனை</u>

அரூர், : அரூரில் சப்போட்டா பழம் கிலோ ரூ20க்கு விற்பனையானது. தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக சப்போட்டோ சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது அறுவடை சீசன் துவங்கிவிட்டதால், விற்பனைக்காக சப்போட்டா வரத்து அதிகரித்துள்ளது. அரூரில், பழக்கடைகளிலும், சாலையோர தள்ளுவண்டி கடைகளிலும் சப்போட்டா விற்பனை சூடு பிடித்துள்ளது. கிலோ ரூ20 முதல் ரூ25 வரை விற்பனை செய்யப்படுகிறது. நடப்பாண்டில் சப்போட்டா விளைச்சல் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்

## <u>கோவையில் கட்டப்பட்டு வரும்புதிய தடுப்பணைகள் பணிகள் 50 சதவீதம் நிறைவு</u>

கோவை, : தமிழக அரசு சார்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலத்தடி நீரை உயர்த்தவும், விவசாய நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்கவும் தேவையான ஏற்பாடுகள் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்காக

தமிழகம் முழுவதும் சுமார் 20 தடுப்பணைகள் அமைக்க 90 கோடியே 63 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் கோவை மாவட்டத்தில் 5 இடங்களில் ரூ.4.50 கோடி செலவில் தடுப்பணை கட்ட கடந்த மாதம் பணிகள் துவங்கப்பட்டது. இப்பணிகள் தற்போது 50 சதவீதம் நிறைவடைந்துள்ளது. இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியது:கோவை நரசிங்கபுரம், மூங்கில் பள்ளம் ஓடையின் குறுக்கே ரூ.1.06 கோடியிலும், தென்னமநல்லூர், சுள்ளிப்பாளையம் ஓடையின் குறுக்கே ரூ.1.06 கோடியிலும், களிக்கநாயக்கன்பாளையம், போடுவம்பட்டி காப்புகாடு அருகே அனைமடுவு பள்ளத்தில் ரூ.93 லட்சத்திலும், கோவை தெற்கு கருஞ்சாமிகவுண்டர்பாளையம், குமுட்டிபட்டி ஆற்றின் குறுக்கே ரூ.79 லட்சத்திலும், மேட்டுப்பாளையம் வட்டம் காலம்பாளையம், பெரியபள்ளம் குறுக்கே ரூ. 66 லட்சத்திலும் என மொத்தம் ரூ. 4.50 கோடி செலவில் 5 தடுப்பணைகள் கட்ட டெண்டர் விடப்பட்டு கடந்த மாதம் பணிகள் துவங்கப்பட்டது. தற்போது இந்த தடுப்பணைகள் கட்டும் பணிகளில் சுள்ளிப்பாளையம் பகுதியில் கட்டப்படும் தடுப்பணையை தவிர மற்ற அணைகள் 50 சதவீதம் முடிந்துள்ளது. வரும் மே மாதத்திற்குள் அனைத்து பணிகளையும் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

## <u>நாளை வாழைத்தார் பொது ஏலம்</u>

திருச்சி,: ஸ்ரீரங்கம் தாலுகா, திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் வாழைத்தார் பொது ஏலம் நாளை (செவ்வாய்) நடைபெற உள்ளது. இந்த ஏலத்தில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதோடு எந்தவித கமி ஷன் இல்லாமல் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. வாழைத்தார் கொண்டு வரும் விவசாயி கள் அன்று காலை 11 மணிக்குள் முன்பதிவு செய்ய வேண்டும்.

## தமிழ்நாடு முழுவதும் 18 இடங்களில் வேளாண் இயந்திரங்கள் வாடகை நிலையம்

அரியலூர், : கரும்பு சாகுபடியை இயந்திரமயமாக்கும் நோக்கத்தில், விதைப்பு முதல் அறுவடை வரை பயன்படுத்தும் வகையில் தமிழ்நாடு முழுவதும் 18 இடங்களில் வேளாண் இயந்திரங்கள் வாடகை நிலையங்கள் அமைக்கப்படும் என அரிய லூர் மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார். அரியலூர் மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை:தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடியை இயந்திரமயமாக்கும் நோக்கத்தில் விதைப்பு முதல் அறுவடை வரை வேளாண் இயந்திரங்களை பயன்படுத்தும் வகையில் மாநில அளவில் 18 வாடகை நிலையங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் 11 வகையான இயந்திரங்களை 60 சதவீதம் விவசாயிகளின் பங்களிப்பு மற்றும் 40 சதவீதம் அரசு மானியத்துடன் வேளாண் மைப் பொறியியல் துறை யால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து இயந்திரங்களை விலைக்கு வாங்கி, கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகளின் ஒருங்கிணைப்புடன் வாடகைக்கு விட அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கு விருப்பமான அனுபவமுடைய தகுதி வாய்ந்த தொழில் முனைவோர் சர்க்கரை ஆலை நிர்வாகத்தினை அணுகி மனு கொடுக்க வேண்டும். மேலும் சர்க்கரை ஆலை நிர்வாகம் மற்றும் வேளாண் துறையின் பரிந்துரையுடன் விண்ணப்பிக்கும் தொழில் முனைவோரை மாவட்ட கலெக்டர் தலைமையிலான “மாவட்ட அளவிலான செயற்குழு” அங்கீகரிக்க வேண்டும். இந்த குழுவால் அங்கீகரிக்கப்படும் தொழில் முனைவோரின் விவரம் மாநில சர்க்கரை துறைக்கும், வேளாண் பொறியியல் துறை தலைமைப் பொறி யாளருக்கும் (வேபொ) அனுப்பப்படும்.மேலும் 60-70 குதிரைத் திறன் கொண்ட டிராக்டர், டிராக்டருடன் இணைத்து பயன்படுத்தக்கூடிய கல்டிவேட்டர், ரோட்டவேட்டர் போன்ற உபகரணங்கள், கரும்பு கணு எடுக்கும் உபகரணம், மண் அணைத்தல், கரும்பு தோட்டத்தில் உழும் வகையிலான மினி டிராக்டர், களை

எடுப்பான், இன்பீல்டர்கள், இரு எண்கள், பேலர், கரும்பு தோகையை தூளாக்க உதவும் சிரேடர் இயந்திரம், கரும்பு அடிக்கட்டை சீவிடும் இயந்திரம், கரும்பு அறுவடை இயந்திரம், இன்பீல்டர்களை இழுத்திட பயன்படும் டிராக்டர் -2 எண்கள் ஆகிய 11 வகையான வேளாண் கருவிகள் மொத்த விலை ரூ.1,89.75 லட்சமாகும். இதில் அரசு மானியம் ரூ. 55.438 லட்சம் போக மீதித்தொகை ரூ. 1,34.12 லட்சம் தொழில் முனை வோரின் பங்களிப்பாக செலுத்தவேண்டும். விருப்பமுள்ள தொழில் முனைவோர் விண்ணப்பித்து பயன்பெற அரியலூர் மாவட்ட கலெக்டர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## <u>கந்தப்பரிச்சான் ஆற்றில் தடுப்பணை கட்டும் பணி ஆய்வு</u>

முத்துப்பேட்டை, : கந்தப்பரிச்சான் ஆற்றில் ரூ.3 கோடியில் தடுப்பணை கட்டும் பணியை தமிழ்நாடு பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை பகுதி டெல்டா மாவட்டத்தில் கடைமடை பகுதி என்பதால் ஆறுகளில் வரும் தண்ணீர் சேமிக்கப்படாமல் கடலில் கலந்து வீணாகி வந்தது. இந்நிலையில் அனைத்து ஆறுகளிலும் தடுப்பணை கட்ட வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில் கந்தப்பரிச்சான் ஆற்றில் தடுப்பணை கட்டக்கோரி அப்பகுதி மக்கள் பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர். இந்நிலையில் சமீபத்தில் நடந்த முத்துப்பேட்டை ஒன்றியக்குழு கூட்டத்தில் கவுன்சிலர் புனிதா கோரிக்கை வைத்தார். இதையடுத்து பொதுப்பணித்துறை சார்பில் முத்துப்பேட்டை அடுத்த செங்காங்காடு கந்தப்பரிச்சான் ஆற்றில் தடுப்பணை கட்ட ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதைதொடர்ந்து தடுப்பணை கட்டும் பணி துவங்கியது. இந்த பணியை தமிழ்நாடு பொதுப்பணித்துறை சிறப்பு செயலாளர் ராஜா, தஞ்சாவூர் கீழ்காவேரி வடிநில வட்ட பொறியாளர் சம்பத், திருவாரூர் வெண்ணாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் ஆய்வு செய்தனர். திருத்துறைப்பூண்டி வெண்ணாறு வடிநில உபகோட்ட உதவி செயற் பொறியாளர்

மூர்த்திராஜன், உதவி பொறியாளர்கள் சண்முகம், கலைராஜன், ஒன்றியக்குழு தலைவர் நடராஜன், ஒன்றியக்குழு உறுப்பினர் புனிதா பாலசுந்தரம் மற்றும் பலர் உடனிருந்தனர்.

**பயறு வகைகளுக்கு 50% மானியம்**

பழநி, : பயறு வகைகளுக்கு 50% மானியம் வழங்கப்படுமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர். பழநி வட்டாரத்தில் பயறு வகைகளான உளுந்து, தட்டை, பாசிப்பயிறு மற்றும் நிலக்கடலை ஆகியவற்றிற்கு அதன் விலையில் 50% மானியமாக வழங்கப்படுகிறது. அதுபோல் நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் ஆயக்கட்டு விவசாயிகளுக்கு மக்காச்சோளம், சோளம், ஜிப்சம், நுண் ஊட்டங்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்பட உள்ளன. இதனை பெற விரும்பும் ஆயக்கட்டு விவசாயிகள் சிட்டா, 2 புகைப்படங்கள், குடும்ப அட்டை ஆகியவற்றுடன் அருகில் உள்ள வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாமென வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**சொட்டுநீர் பாசனத்தில் சின்ன வெங்காயம் நடவு விவசாயிகள் ஆர்வம்**

சின்னமனூர், : சின்னமனூர் பகுதிகளில் சிக்கன நடவடிக்கையில் பயிர்கள் அதிகமாக உற்பத்தி செய்திடும் விதமாக சொட்டுநீர் பாசனத்தில் சின்ன வெங்காயம் நடவு செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சின்னமனூர் பகுதிகளில் விவசாயத்தையே குறிக்கோளாகக் கொண்டு பல பயிர்களை தொடர் விவசாயம் செய்து வருகின்றனர். அதன்படி சுமார் 4 ஆயிரம் ஏக்கரில் வருடத்தில் முல்லைப்பெரியாற்று பாசனத்தில் இருபோகம் நெல் உற்பத்தி நடக்கிறது. தவிர்த்து ஆழ்குழாய் மற்றும் கிணற்று பாசனங் களில் வாழை, தென்னை, திராட்சை அனைத்து காய்கறி வகைகள், தக்காளி போன்றவை கள் விளைவித்து எடுக்கப்பட்டு வருகிறது. ஆற்று பாசனம் தவிர்த்து பாசனப்பற்றாக்குறையை போக்கிடும் வகையில் சொட்டுநீர் பாசனத்தின் மூலமாக நிலத்தில் தண்ணீர் படாமல் நேராக செடிகளின்

வேர்களில் படுவதைப்போல் மாற்றி அமைத்து வருகின்றனர். தற்போது அனைத்து பயிர்களுக்குமே சொட்டுநீர் பாசன முறையை பின்பற்றி வருகின்றனர் ஏராளமான விவசாயிகள். அந்த வகையில் சின்ன வெங்காயத்தின் உற்பத்தி திறனை அதிகப்படுத்திடும் விதமாக சொட்டுநீர் பாசனத்தில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஏற்கனவே ஒருகிலோ சின்ன வெங்காயம் ரூ.40 முதல் ரூ.50 வரையில் கூடுதல் விலைக்கு விற்கப்பட்டது. விலையை குறைத்திடும் விதமாக கூடுதல் உற்பத்தியினை செய்து வருவதால் தற்போது வெங்காய விலை கிலோ ரூ.20 ஆக குறைந்துள்ளது. அதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**நாளையுடன் நெல் கொள்முதல் நிலையங்கள் மூடல்**

பரமக்குடி, : ராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் நாளையுடன் மூடப்பட உள்ளன. ராமநாதபுரம் கலெக்டர் நந்தகுமார் விடுத்துள்ள அறிக்கை: ராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல்லுக்கு உரிய விலை கிடைக்கும் பொருட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் நேரடி கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்டத் தில் தற்போது அறுவடைப்பணி முடிவடைந்துள்ளதால் நாளையுடன் (மார்ச் 31) செயல்பட்டு வரும் அனைத்து நெல் கொள்முதல் நிலையங் களும் மூடப்பட உள்ளன. எனவே மார்ச் 31க்குள் விவசாயிகள் தங்கள் கைவசம் இருப்பில் உள்ள நெல்லை அரசு கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறலாம். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**கொளுத்தும் கோடை வெயில்... மானாமதுரையில் தர்பூசணி விற்பனை விறுவிறு டன் கணக்கில் குவிக்கும் வியாபாரிகள்**

மானாமதுரை, : மானாமதுரையில் தர்பூசணி பழங்களை விற்பனைக்காக வியாபாரிகள் டன் கணக்கில் குவித்து வருகின்றனர். கீழ்கரையில் உள்ள காந்திசிலை, அரசு மேல்நிலைப்பள்ளி, சிவகங்கை மெயின்ரோடு,

மேல்கரையில் அண்ணா சிலை, பைபாஸ்ரோடு, புது பஸ் ஸ்டாண்டு உள்ளிட்ட பகுதிகளில் மழை காளான் போல் ஆரஞ்சு, தர்பூசணி கடைகள் முளைத்துள்ளன. குறைந்த விலையில் நிறைவான தாகத்தை தீர்ப்பதால் பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் ஆர்வமுடன் வாங்கி சாப்பிடுகின்றனர். இதுகுறித்து பழவியாபாரி ராசு கூறுகையில், விருதுநகர் வீரசோழன் கிராமத்தில் உள்ள விவசாயிகளிடம் தர்பூசணி பழங் களை குத்தகைக்கு எடுத்துள்ளோம். இந்தாண்டு எதிர்பார்த்த மழை இல்லாததால் தர்பூசணி விளைச்சல் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு தர்பூசணி பழங் களை கிலோ ரூ.12க்கு விற் றோம். ஆனால் இந்தாண்டு டீசல் விலை உயர்வால் லாரி வாடகை அதிகமாகி விட்டது. இதனால் கிலோ ரூ.15க்கு விற்கிறோம். சீசனுக்கு முன்னர் வந்தாலும் விற்பனை அமோகமாகஉள்ளதுஎன்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**முல்லைப்பெரியாறு அணை வழக்கு: தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று விசாரணை 4 வாரம் ஒத்திவைப்பு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு**



புதுடெல்லி, முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பு தொடர்பான வழக்கில், தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று விசாரணையை சுப்ரீம் கோர்ட்டு 4 வாரங்களுக்கு ஒத்திவைத்தது.

தமிழக அரசு வழக்கு

முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்புக்காக மத்திய தொழில் பாதுகாப்புப் படையினரை நிறுத்துமாறு மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரி தமிழக அரசு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தது. கடந்த பிப்ரவரி 19–ந்தேதி இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட சுப்ரீம் கோர்ட்டு, இது குறித்து 4 வாரங்களுக்குள் விளக்கம் அளிக்குமாறு மத்திய அரசு மற்றும் கேரள அரசுக்கு நோட்டீசு அனுப்புமாறு உத்தரவிட்டது.

<u>கேரளா பதில் மனு</u>

இந்த நிலையில் கேரள அரசின் சார்பில் வக்கீல் ரமேஷ் பாபு கடந்த வெள்ளிக்கிழமை சுப்ரீம் கோர்ட்டில் பதில் மனு தாக்கல் செய்தார்.

அதில், அணையின் பாதுகாப்புக்காக மத்திய தொழில் பாதுகாப்பு படையினரை நியமிக்க தேவை இல்லை என்றும், எனவே தமிழக அரசின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டு இருந்தது.

<u>4 வாரங்களுக்கு ஒத்திவைப்பு</u>

இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் தலைமை நீதிபதி எச்.எல்.தத்து மற்றும் நீதிபதி அருண் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. விசாரணை தொடங்கியதும், தமிழக அரசின் சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் ஜி.உமாபதி, கேரள அரசு தாக்கல் செய்துள்ள பதில் மனுவின் மீது எதிர்பதில் மனு செய்ய மேலும் 4 வார காலஅவகாசம் தேவை என்று கோரினார். அவரது வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை 4 வாரங்களுக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

## <u>தக்கலை வட்டார தோட்டக்கலை சார்பில் திறன் வளர்ப்பு பயிற்சி</u>



தக்கலை வட்டார தோட்டக்கலைத்துறை சார்பில் அட்மா திட்டத்தின்கீழ் சேவியர்புரம் மற்றும் பிரம்மபுரம், அம்மா பண்ணை மகளிர் குழு உறுப்பினர்களுக்கு, செயல்விளக்கம் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் சேவியர்புரம் மகளிர் குழு உறுப்பினர்களுக்கு, மாடி காய்கறி தோட்டம் குறித்த செயல்விளக்கம், அம்மா தலைவர் செல்லமுத்து முன்னிலையில் செய்துகாட்டப்பட்டது. பிரம்மபுரம் மகளிர் குழு உறுப்பினர்களுக்கு, தக்கலை தோட்டக்கலை உதவி இயக்குனர் ஷீலா ஜாண் செய்து காட்டினார். மேலும், மாடித்தோட்டம் அமைத்தல் மற்றும் தேனீ வளர்ப்பு குறித்த திறன் வளர்ப்பு பயிற்சி சேவியர்புரத்தில், பஞ்சாயத்து தலைவர் முருகராஜன் தலைமையில் நடந்தது. இதில் வேளாண் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி ரிச்சர்டு கென்னடி, பத்ரன் ஆகியோர் பேசினர். இதில் வார்டு உறுப்பினர் ஸ்ரீதரன் கலந்து கொண்டார். பிரம்மபுரத்தில் திறன் வளர்ப்பு பயிற்சி மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நிஜாமுதீன் தலைமையில் நடந்தது. இதில் குருந்தன்கோடு தோட்டக்கலை உதவி இயக்குனர் கண்ணன், பத்ரன் ஆகியோர் பேசினர்.

<u>முத்துப்பேட்டையில் திடீர் மழை</u>



வழக்கத்துக்கு மாறாக இந்த ஆண்டு மார்ச் மாதத்திலேயே கோடை வெயில் வாட்டி வதைக்க தொடங்கி விட்டது. திருவாரூர் மாவட்டம் முழு வதும் கடந்த ஒரு வாரமாக கோடை வெயில் உச்சத்தை எட்டி உள்ளது. ஆனால் மாவட்டத்தில் அமைந்த ஒரே கடற்கரை பகுதியான முத்துப் பேட்டையில் கோடை காலத்திலும் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு 3 மணி நேரம் தொடர்ந்து பலத்த மழை பெய்தது. நேற்று திரு வாரூர், மன்னார்குடி, நீடாமங்கலம் உள்ளிட்ட இடங்களில் வெயில் வறுத்தெடுத்த நிலையில் முத்துப் பேட்டை யில் காலை 11 மணி அளவில் திடீரென மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை மதியம் 2½ மணி வரை நீடித்தது. பலத்த மழை காரணமாக முத்துப் பேட்டை - திருத் துறைப்பூண்டி சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் வாகனங்கள் தட்டு, தடுமாறியபடி பயணித்தன. கோடை காலத்தில் அவ் வப்போது பெய்து வரும் மழை காரணமாக முத்துப் பேட்டை பகுதி தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வழக்கத்துக்கு மாறாக இந்த ஆண்டு மார்ச் மாதத்திலேயே கோடை வெயில் வாட்டி வதைக்க தொடங்கி விட்டது. திருவாரூர் மாவட்டம் முழு வதும் கடந்த ஒரு வாரமாக கோடை வெயில் உச்சத்தை எட்டி உள்ளது. ஆனால் மாவட்டத்தில் அமைந்த ஒரே கடற்கரை பகுதியான முத்துப் பேட்டையில் கோடை காலத்திலும் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு 3 மணி நேரம் தொடர்ந்து பலத்த மழை பெய்தது. நேற்று திரு வாரூர், மன்னார்குடி, நீடாமங்கலம் உள்ளிட்ட இடங்களில் வெயில்

வறுத்தெடுத்த நிலையில் முத்துப்பேட்டை யில் காலை 11 மணி அளவில் திடீரென மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை மதியம் 2½ மணி வரை நீடித்தது. பலத்த மழை காரணமாக முத்துப் பேட்டை - திருத் துறைப்பூண்டி சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் வாகனங்கள் தட்டு, தடுமாறியபடி பயணித்தன. கோடை காலத்தில் அவ் வப்போது பெய்து வரும் மழை காரணமாக முத்துப் பேட்டை பகுதி தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.